**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 62/2021** **நாள் 21.07.2026**

**வாசா.2, திரு.சிவசக்தி**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கின் வாதி பெயர் குமரேசன். அவருக்கும் எனக்கும் இடையில் 10, 12 வருடங்களாக பழக்கம். என்னுடைய காம்பலெக்ஸ் பகத்தில் தான் அவர் வேலை பார்க்கும் பள்ளிக்கூடம் ஆகும். என்னுடைய காம்ப்லெக்ஸ் வழியாக தான் வேலைக்கு செல்வார் அதன் மூலம் பழக்கம். எதிர்வாதியானவர் வாதியிடமிருந்து ரூ.11 லட்சத்தை கடன் வாங்கியுள்ளார். கடன் தொகையை 01.12.2018ம் தேதியில் மாலை 6.00 மணியளவில் வாதியின் வீட்டு மாடியில் வைத்து எதிர்வாதியானவர் வாங்கினார். எதிர்வாதியுடன் காளீஸ்வரன் என்பவர் வந்திருந்தார். காளீஸ்வரனுக்கும் எனக்கும் பழக்கம் இல்லை. என்னை சாட்சி கையொப்பம் செய்ய சொல்லி யார் அழைத்தது என்று கேட்டால் எதிர்வாதி சுரேஷ்குமார் அழைத்தார். நான் கடையில் பிளக்ஸ் அடிக்க சென்ற போது எதிர்வாதியானவர் மாலையில் தான் என்னை கூப்பிட்டார். நான் கடையில் பிளக்ஸ் அடிக்க தற்செயலாக சென்ற போது எதிர்வாதியானவர் அங்கு வந்தவர் தான் என்னை மாலையில் சாட்சி கையொப்பம் செய்ய கூப்பிட்டார். காளீஸ்வரனுக்கும் வாதி குமரேசனுக்கு இடையில் என்ன பழக்கம் என்று கேட்டால் எனக்கு தெரியாது. காளீஸ்வரனுக்கும் பிரதிவாதி சுரேஷ்குமாருக்கும் பழக்கம் உள்ளதா என்று கேட்டால் பிரதிவாதி தான் காளீஸ்வரனை கூப்பிட்டு வந்தார். காளீஸ்வரனை சாட்சி கையொப்பம் செய்ய நான் கூட்டி செல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதி சுரேஷ்குமார் கடன் பணம் வாங்க வாதியின் வீட்டிற்கு மேல்மாடிக்கு சென்ற போது என்னை பார்த்து வாதி குமரேசனின் வீட்டிற்கு என்னை சாட்சி கையொப்பம் போட வேண்டும் என அழைத்தார், என்னுடன் இருந்த காளீஸ்வரனையும் உடன் அழைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அப்படி தான் சொல்லியுள்ளேன்.தாவா புரோ நோட்டை யார் எழுதியது என்று கேட்டால் எதிர்வாதி சுரேஷ்குமார் தான் எழுதினார். எங்கு வைத்து எழுதினார்கள் என்று கேட்டால் மாடியில் வைத்து எழுதினார்கள். பணம் கொடுக்கும் போது நான் உடனிருந்தேன் நேரில் பார்த்தேன். எதிர்வாதி எதற்காக கடன் வாங்கினார் என்று என்னிடம் சொல்லவில்லை. என்ன தேவைக்காக கடன் தொகையை கேட்பதாக எதிர்வாதியானவர் என்னிடம் சொல்லவில்லை நானும் கேட்டுக்கொள்ளவில்லை. எதிர்வாதியானவர் வாதியிடமிருந்து கடன் வாங்க போவதற்கு முன்பாக என்னிடத்தில் கடன் வாங்க போவதாக சொல்லவில்லை. நான் டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். தாவா புரோ நோட்டில் முதலாவதாக சாட்சி கையொப்பத்தை நான் தான் போட்டேன். 2வதாக சாட்சியாக காளீஸ்வரன் என்பவர் போட்டார். எதிர்வாதியின் குடும்பத்தை எனக்கு நன்றாக தெரியும். சுமார் 10, 12 ஆண்டு காலமாக தெரியும். கடைக்கு போய் வருவதில் எனக்கு பழக்கம். எதிர்வாதியின் கைபேசி எண் எனக்கு தெரியாது. எதிர்வாதிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள்

என்று எனக்கு தெரியாது.எதிர்வாதி மனைவி பெயர் எனக்கு தெரியாது. எதிர்வாதியானவர் எப்பொழுது கையெழுத்துபோட்டார் என்று கேட்டால் பணத்தை வாங்கி கொண்டு தான் கையெழுத்து போட்டார். நான் புரோ நோட்டை படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்று கேட்டால் படித்து பார்க்கவில்லை கையெழுத்து போட்டேன். தாவா புரோ நோட்டை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்று கேட்டால் அன்றைய தினம் தான். வாதி குமரேசனுக்கு எதிராக உள்ள 2 போர்ஜரி குற்ற வழக்குகள் பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. தாவா புரோ நோட்டில் உள்ள கையொப்பம் எதிர்வாதியுடையது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்வாதியானவர் ஒருபோதும் வாதியிடமிருந்து கடன் தொகையை வாங்கவில்லை என்றும் நானும் என்னோடு சேர்ந்தவர்களும் சேர்ந்து தாவா புரோ நோட்டை போர்ஜரியாக உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. எனவே பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 21st day of July 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.